**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W. 1**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. புஷ்பம் | Calling | : கூலி |
| Husband's name | : திரு. நைனார் | Religion | : இந்து |
| Village | : மலப்பட்டி | Age | : 50 |
| Taluk | : | | |

நாள் - **20.08.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மலப்பட்டி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி என் மகன் ஆவார். வழக்கில் இறந்து போன நைனார் என்பவர் எனது கணவர் ஆவார். எனக்கு ஒரு பெண், மூன்று ஆண் குழந்தைகள் ஆவார்கள். என் பெண்மகளை கட்டி கொடுத்திருக்கிறேன், மூத்த பையனுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் கணவர் இறந்து பத்து வருடங்கள் ஆகிறது, சுமார் 10 வருடஙகளுக்கு முன்பு ஒரு நாள் என் கணவர் வெளியே சென்றுவிட்டு வந்த போது, கீழே விழுந்து மூச்சு பேச்சு இல்லாமல் இருந்தார், தூக்கி பார்த்தோம் இறந்திருந்தார். என் கணவர் இறந்த விஷயமாக கீழவளவு போலிசாரிடம் புகார் கொடுத்தோம். என்னிடம் எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது ஆகும், அது அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் என் கணவர் மரணம் பற்றியும், அவரை யார் கொலை செய்தார்கள் என்றும், என்ன ஆயுதத்தால் கொலை செய்தார்கள் என்றும் நான் சொல்லவில்லை. எதிரி மீது என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் என்னுடைய கணவர் நைனார் என்றும், எனது இரண்டாவது பையன் ராமராஜ் என்ற ஊதகாத்து என்ற பையனுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கவில்லை என்ற தகராறில் அடிக்கடி சண்டை வந்ததாகவும், கடந்த 05.11.2016 ம் தேதி இரவு 8.15 மணியளவில் எங்கள் ஊர் சூரப்பிடாரி அம்மன் கோவில் அருகே ஆஜர் எதிரி என் மகன் என் கணவரை கல்யாணம் பண்ண சொல்லி கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், நான் கண்டித்தேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி என் கணவரை பார்த்து நீ உயிரோடு இருநதால் எனக்கு கல்யாணம் ஆகாது, நீ செத்தால் தான் கல்யாணம் ஆகும் என்று இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என் கணவரின் இடது மார்பு மற்றும் இடதுபக்க கழுத்து ஆகிய இடங்களில் குத்தி என் கணவர் அதே இடத்தில் இறந்துவிட்டதாகவும், நான் கொடுத்த எழுத்து மூலமான புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்ற எனக்கு தெரிந்த உண்மை சம்பவங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.21 10:07:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W. 2**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. நந்தினி | Calling | : கூலி |
| Husband's name | : திரு. தவசிராஜன் | Religion | : இந்து |
| Village | : வடக்குவளையபட்டி | Age | : 33 |
| Taluk | : | | |

நாள் - **20.08.2025**

**(எதிரி ஆஜர்)**

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது வடக்கு வளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய தாயார் ஆவார். ஆஜர் எதிரி என் அண்ணன். இந்த வழக்கில் இறந்து போன நைனார் என்னுடைய அப்பா ஆவார். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என் அப்பா இறந்துவிட்டார், எப்படி இறந்தார் என்பது தெரியாது. தகவல் சொல்லி நான் பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரி மீது போலிசார் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. என் அம்மா எதிரி மீது என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 05.11.2016 ம் தேதி இரவு 8.15 மணியளவில் எங்கள் ஊர் சூரப்பிடாரி அம்மன் கோவில் அருகே ஆஜர் எதிரி என் அண்ணன் என் தகப்பனாரை கல்யாணம் பண்ண சொல்லி கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், என் அம்மா கண்டித்தேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி என் அப்பாவை பார்த்து நீ உயிரோடு இருநதால் எனக்கு கல்யாணம் ஆகாது, நீ செத்தால் தான் கல்யாணம் ஆகும் என்று இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை

எடுத்து என் அப்பாவின் இடது மார்பு மற்றும் இடதுபக்க கழுத்து ஆகிய இடங்களில் குத்தி என் அப்பா அதே இடத்தில் இறந்துவிட்டதாகவும், இதுவிசயமாக நான் சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்று போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் அண்ணன் என்பதால் அவரை காப்பாற்ற எனக்கு தெரிந்த உண்மை சம்பவங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்)

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.21 10:07:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.